செய்தி வெளியீடு எண்: 06-2018 நாள்: 04.06.2018

# விழுப்புரம் மாவட்ட அரசு இசைப்பள்ளியில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

தமிழகத்தில் உள்ள கிராமப்புற மாணவர்களும் முறையான இசைக்கல்வி பெற வேண்டும் என்ற நோக்கிலும், நமது நாட்டிலும் மற்றும் அயல்நாடுகளில் இசை, நாடனத்திற்கென ஏற்பட்டுள்ள பல்வேறு விதமான வேலைவாய்ப்புகளும் அனைத்து மாவட்ட மக்களுக்கும் சரிசமமாக சென்றடைய வேண்டும் என்ற நோக்கிலும் மாவட்டம் தோறும் இசைப்பள்ளிகள் தமிழக அரசினால் தொடங்கப்பட்டது.

கலை பண்பாட்டுத்துறையின் கீழ் தமிழ்நாட்டில் தற்போது 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்களில் பயில்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குத் தேவையான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இசைக்கல்விக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு அரசு இசைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்த தற்பொழுது மாதந்தோறும் கல்வி உதவித்தொகை ரூ.400/- வழங்கப்பட்டு வருகின்றது.

விழுப்புரம் மாவட்ட அரசு இசைப்பள்ளி 1998ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இப்பள்ளியில் குரலிசை, நாதசுரம், தவில், தேவாரம், பரதநாட்டியம், மிருதங்கம், வயலின் ஆகிய துறைகளில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயின்று தேர்ச்சி பெற்றுள்ளனர். இப்பள்ளிகளில் ஏழை நடுத்தர வகுப்பு மாணவர்கள் இசை, நடனம் முறையான வழியில் தகுதியான ஆசிரியர்களிடம் பயிலுவதற்கு இசைப்பள்ளிகள் வாய்ப்பாக அமைந்துள்ளது.

மாணவர்கள் சேர்வதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பிரிவுகளில் சேர்தற்கு வயது வரம்பு 12 முதல் 25 வரை குரலிசை, பரதநாட்டியம், வயலின், மிருதங்கம் ஆகியவை சேர 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியமாகும். ஏனைய துறைகளுக்கு எழுதப் படிக்க தெரிந்தால் போதுமானது. பயிற்சி காலம் 3 ஆண்டுகள் முடிந்தவுடன் அரசுத் தேர்வு நடத்தப்பட்டு, அரசு சான்றிதழ்கள் வழங்கப்படும். சுயவேலைவாய்ப்பு மற்றும் அரசு வேலை வாய்ப்பிற்கு வழி வகுக்கும் கல்வி. ஆண் பெண் இரு பாலரும் சேரலாம். பயிற்சி நேரம் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை. பிற்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு இலவச பேருந்து சலுகை வழங்கப்படுகிறது. மற்றும் தமிழக முதலமைச்சரின் உத்தரவுக்கிணங்க மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.400/- கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மற்றும் இலவச விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகிறது. பள்ளியில் சேருவதற்கான விண்ணப்பங்கள் தலைமை ஆசிரியர், மாவட்ட அரசு இசைப்பள்ளி, நகராட்சி விளையாட்டுத்திடல், பழைய நீதிமன்ற சாலை, விழுப்புரம் - 605602 என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.